## பயிற்சிகள்.

வணக்கம் மாணவர்களே,

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதி தொலைவரியில் அனுப்பவும். இது இவ்வாரத்திற்கான பாடம். அதனால், இக்கேள்விக்கான பதிலை வெள்ளிக்கிழமைக்குள் அனுப்பி விடவும். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) செவ்வாய் இரவு **8.30** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

மருந்தாய் நோயில் விருந்தாய்ப் பசியில்
இருந்தாய்; நீயெனை வாழ்வித்தாய்!
மறந்தாய் உன்னை; நினைந்தாய் என்னை
அருந்தாய்ப் பணபை அறிவித் தாய்!
வருந்தாய் நாளும் மெலிந்தாய் மேனி
உழைத்தாய் இரவில் துயில் நீத்தாய்!
புரிந்தாய் **வினைகள்** முடித்தாய் கடனை;
படுத்தாய்; ஒருநாள் உயிர் நீத்தாய்!

**(வாலிபக்கவிஞர் வாலி)**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **அணிநயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. (i) **வினைகள்** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

   (ii)

   | |
   |---|
   | வருந்தாய் நாளும் மெலிந்தாய் மேனி<br>உழைத்தாய் இரவில் துயில் நீத்தாய்! |

   இவ்வடிகளில் **தாயின் உடல் மெலிந்ததற்கான காரணம்** என்ன? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **முதன்மைக் கதைப் பாத்திரத்தைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **சிக்கல்** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> கம்பர் : நான் என் விருப்பத்துக்கு அவர்களை இணங்க வைத்தேன். அனைவரும், அதோ அந்த மண்டபம் வரையிலும் வந்துதான் வழியனுப்பினார்கள். அவர்கள் கொண்டு வந்த சிவிகையை நானே திருப்பி அனுப்பினேன். வேண்டாம் ..... [உணர்ச்சி மிகுதியுடன் குரலைத் தாழ்த்தி] நான் திருவழுந்தூர்ப் பூசாரி மகனாகவே நடந்து செல்கிறேன். இந்த நிலையை என்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது. இதற்காக யாருக்கும் நான் கடன்பட வேண்டியதும் இல்லை.
>
> குணவீர : [மனவருத்தத்துடன் கற்றுச் சொல்லிகளைப் பார்த்து] மாணாக்கர்களே. கவிஞர் பெருமானுக்கு வழிப் பயணத்தில் யாதொரு சிரமமும் நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். சோழன் சபைக்குத் தங்கப் பல்லக்கில் வந்தீர்கள்; சோழன் சபையை விட்டுக் கால்நடையாகப் பயணமாகிறீர்கள். இந்த நிலையை நினைத்தாலே என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. இந்தத் தமிழகத்தையும் தமிழையும் விண்ணுக்கு உயர்த்தும் **அருஞ்சாதனையைச் சாதித்து விட்டுத்**, தன்னிகரற்ற தனிப் பெருங் காவியத்தைக் கையில் சுமந்து கொண்டு காட்டு வழியில் நடப்பதா? எல்லாம் விதியின் செயல்.
>
> (அங்கம் 2, காட்சி 1, பக்கம் 141)
> (பாரி நிலையம் 2015)

   (i) இச்சூழலில் வெளிப்படும் குணவீர பண்டிதரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

   (iii) **அருஞ்சாதனையைச் சாதித்து விட்டு** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

   (iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

7. அகல்விளக்கு நாவலாசிரியர் பெற்ற **விருது** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) அகல்விளக்கு நாவலில் **கல்லூரியில் படித்த இருவரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) அகல்விளக்கு நாவலின் **காலப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> அப்போதுதான் என் உள்ளம் திறந்து சொன்னேன். "நான் அப்படிப் படத்தின் அழகில் மயங்கிக் **கெட்டுப் போகிற ஆள் அல்ல**. அதெல்லாம் உண்மை அழகு அல்ல. மேற்பூச்சும் அலங்காரமுமே அதிகம். அவற்றை நம்புகிற பேர்வழி நான் அல்ல. நடிப்பு மட்டும் உண்மையாகவே சிறந்த கலை. அதைத்தான் பாராட்ட வேண்டும்" என்றேன்.
>
> "அப்படியானால் நீங்கள் அவர்களின் அழகில் மயங்கவில்லையா?"
>
> "நீ ஆண் நடிகரின் அழகில் மயங்கவில்லையா?"
>
> "சேச்சே! அந்த எண்ணம் வந்தால் நான் சினிமாவுக்கே போகமாட்டேன். தெரியுமா?"
>
> "அவர்கள் என்னைவிட அழகாக இல்லையா? அதனால் உனக்கு ஆசையாக இல்லையா?"
>
> "சே! என்ன பேச்சு இது! தெருவில் போகிற ஒருவன் அழகாக இருந்தால், அதனால் அவன்மேல் ஆசை தோன்றி விடுமா?"
>
> (அத்தியாயம் 23, பக்கம் 325)
> (பாரி நிலையம் 2015)

(i) இச்சூழலில் வெளிப்படும் வேலய்யனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **கெட்டுப் போகிற ஆள் அல்ல** என்பதன் **சூழலுக்கேற்ற** பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]